Media: Tamil Murasu

Section/Page: News / Page 4

Date: 6 January 2013

Headline: Family violence

தமிழ் முரசு ஞாயிறு 6 1 2013 | சிங்கப்பூர் | 4

குடும்ப வன்முறைக்கு மௌனம் தீர்வல்ல

இளவரசி மகேந்திரன்

குடும்பத்தில் கணவன் மனைவி இடையே பிரச்சினைகள் ஏற்படும் போது அவர்கள் இருவரில் ஒருவர் அல்லது இருவருக்கும் தெரிந்த ஒருவர் கீழ்க்கண்ட வாசகங் களைத் தவறாமல் கூறுவர்:

"குடும்பம் என்றால் சண்டை சச் சரவுகள் இருக்கத்தான் செய்யும். அது கணவன் மனைவி பிரச் சினை; அதில் மற்றவர்கள் தலையிடக்கூடாது. காலப்போக் கில் சரியாகிவிடும்."

இந்த நம்பிக்கையுடனேயே இன்று நாளை என பல ஆண்டு களாக ஏங்கி இறுதியில் நீதி மன்றக் கதவுகளைத் தட்டி நீதியையும் தாம் இழந்த நிம்மதியை யும் சேர்த்து பெற்று வந்துள்ளார் திருவாட்டி நவிகா, 35. (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

வெளியில் சொல்லாமல் மவுனமாக இருப்பதால், வன்முறைத் தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கவே செய்கிறது. குடும்ப வன்முறை, ரகசியங்களில் இருந்து தொடங்குகிறது என்கிறார் சமூக சேவையாளர் திருவாட்டி கதா நாயர். **கோப்புப் படம்**

காதலித்து மணந்தவர் கொடுமைக்காரர் ஆனார்

உடன் பணியாற்றிய ஒருவரை சில மாதங்கள் காதலித்து மணம் முடித்தார் நவிகா. 365 நாட்களுக் குள்ளாகப் பார்த்துப் பழகி திரு மணமும் முடித்து விட்டார் அவர்.

ஆரம்ப நாட்களில் நல்லபடியா கத்தான் நடந்து கொண்டார் அவரது கணவர்.

சில மாதங்களுக்குப் பின்னர் வேலையிடத்தில் பிரச்சினை என்றாரோ அல்லது வேறு ஏதாவது கவலை என்றாரோ வீட்டுக்கு வந்தவுடன் புகை பிடிக்கத் தொடங் கினார். பின்னர் மதுவும் அருந்தத் தொடங்கினார்.

"ஏன் என்று கேள்வி கேட்டால் என் வாயை மூடுவதற்காக என்னை அடிப்பார்," என்று தமிழ் முரசிடம் கூறினார் திருவாட்டி நவிகா.

இப்படியே சண்டை, சமாதானம் மீண்டும்சச்சரவுஎனத்தொடர்ந்தது அவர்களது குடும்ப வாழ்க்கை.

ஒரு கட்டத்தில் கணவருக்கு வேலையும் போய் விட்டது.

இதனால் குடும்பச் செலவுக்கு மட்டுமல்லாமல் கணவரின் சிகரெட் செலவுக்கும் பணம் அளிக்கும் பொறுப்பு நவிகா மேல் விழுந்தது.

இதனிடையே நவிகாவுக்கு குழந்தையும் பிறந்தது. பிள்ளை வந்துவிட்டால் கணவரின் பழக்க வழக்கம் சரியாகி மீண்டும் அன்பாக இருப்பார் என்று நம்பிய நவிகா பல தொந்தரவுகள், வன் முறைகளுடன் நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்திவந்துள்ளார்.

ஆனால் இரண்டாவது மகள் பிறந்த பின்னரும் கணவரின் போக்கு மாறவேயில்லை.

"ஒருபக்கம் நீயே விரும்பி செய் துகொண்ட திருமணம்தானே. கிடைத்த வாழ்க்கையை விட்டு விடாதே என்று என் குடும்பத்தினர் கூறினர்.

"மறுபக்கம் என் கணவர் என்னை அடிப்பதுடன் பிள்ளை களையும் அடிக்கத் தொடங்கி விட்டார். ஒரு கட்டத்தில் மூத்த மகனைக் கடுமையாக அடித்துக் காயப்படுத்தியதில் மருத்துவரிடம் செல்லும் அளவுக்கு நிலைமை ஆகிவிட்டது," என்றார் நவிகா.

அப்போது காவல் நிலையம் வரை சென்றதால் தனிநபர் பாதுகாப்பு ஆணை பற்றி நவிகா விற்கு விளக்கப்பட்டது. உடனே அவரது மூத்த மகன் "அம்மா நமக்கு அதுதானே வேண்டும்," என்று கூற உடனடியாகச் செயலில் இறங்கினார் நவிகா.

வன்முறைகளுக்கு எதிரான மாற்று நடவடிக்கைகள் வழங்கும் நிலையத்திற்கு (பேவ்) அவர் பரிந்துரைக்கப்பட்டார்.

பின்னர் அவருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் கணவருக்கும் பலகட்ட ஆலோசனைகள் வழங்கப் பட்டன. அதே நேரத்தில் விவாக ரத்து வழக்கும் தொடரப்பட்டது.

உடல்ரீதியாகவும் பொருளியல் ரீதியாகவும் தொல்லை தந்து கொண்டிருக்கும் கணவரிடம் இருந்து பிள்ளைகளையாவது காப் பாற்றி அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற நோக்கில் கிடைத்த வேலைகளையெல்லாம் செய்யத் தொடங்கினார் நவிகா.

குடும்ப வன்முறைக்குத் தீர்வு வழங்கும் நிலையங்களின் தொடர் ஆலோசனைச் சேவைகள், உதவி கள் அவருக்கு வேண்டிய வழி முறைகளைக் காண்பிக்க இன்று தமது இரு பிள்ளைகளுடன் நிம்மதியாக, சுய கௌரவத்துடன் வாழ்ந்து வருகிறார் திருவாட்டி நவிகா.

படித்த பெண்கள் கூட குடும்ப வன்முறைக்கு ஆளாவது ஏன்?

குடும்ப வன்முறை என்பது ரக சியங்களில் இருந்து தொடங்கு கிறது என்றார் 'பேவ்' நிலையத் தின் நிர்வாக இயக்குநர் திருவாட்டி கதா நாயர்.

"ஒர் உறவுக்குள் இருக்கும் பிரச்சினைகள் வெளியே தெரியக் கூடாது என்று மறைத்து மறைத்து வன்முறையை வளர்க்கக்கூடாது. குடும்ப வன்முறைக்கு எதிரான முதல் அடியை எடுத்து வைப்ப தற்கே பத்து ஆண்டுகள் வரை எடுத்துக் கொள்வதும் நல்லதல்ல," என்றார் திருவாட்டி கதா நாயர்.

கடந்த சில ஆண்டுகளில் குடும்ப வன்முறை குறித்த விழிப்பு ணர்வை மக்களிடையே ஏற்படுத்து வதில் ஊடகங்கள் சிறந்த பங்காற்றுகின்றன.

சமூக மன்றங்கள், அடித்தள அமைப்புகள், நாடாளுமன்ற உறுப் பினர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்ட வர்களின் குறைகளுக்குத் தீர்வு காண்பதில் குறிப்பிடத் தகுந்த உதவியாற்றியதாக பாதிக்கப்பட்ட வர்கள் தம்மிடம் கூறியதைப் பகிர்ந்து கொண்ட திருவாட்டி கதா நாயர், தமது பல ஆண்டு சமூக சேவையில் தம் உள்ளத்தைத் தொட்ட ஒரு நிகழ்வை நினைவு கூர்ந்தார்.

குடும்ப வன்முறையில் அதிகம் பாதிக்கப்படுவது குழந்தைகள்

வன்முறைக்கு இலக்கான பிள்ளை ஒன்றிடம் நீ உன்னை எந்த விலங்குடன் ஒப்பிடுவாய் என்று கேட்டபோது நீண்ட நேரம் யோசித்த அந்த எட்டு வயதுக் குழந்தை, "நான் எறும்பாக இருக்க ஆசைப் படுகிறேன். அப்போதுதான் யார் காலின் கீழாவது மிதிப்பட்டு நான் உடனடியாக கடவுளிடம் சென்று விடலாம்," என்று சோகமாகக் கூறியதை நினைவுகூர்ந்த அவர் குடும்ப வன்முறையின் நிரந்தர காயங்களைச் சுமப்பது பிள்ளைகள் தான் என்றார்.

திட்டவட்டமாக ஆரம்பிக்கும் குடும்ப வன்முறை பின்னர் அச்ச றுத்தல், தொடர் தொந்தரவுகள், மனரீதியான துன்புறுத்தல்கள், பின்னர் உடல்ரீதியான தாக்குதல் கள் என்று தீவிரமாக உருமாறும் என்றார் அவர்.

கட்டிய கணவன் என்று மனைவி பொறுத்துக்கொண்டா லும் தொடர் வன்முறை, துன்புறுத் தல் என அமைதியற்ற சூழலில் வளரும் பிள்ளைகளின் எதிர்காலம் தான் உணர்வுரீதியான, உளரீதியான பாதிப்புக்குள்ளாகும் என்று விளக்கினார் கதா நாயர்.

mrasi@sph.com.sg

'பிபிஓ' விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு		2007	2008	2009	2010	2011
தனிநபர் பாதுகாப்பு ஆணை விண்ணப்பம்		2,554	2,547	2,971	3,058	2,871
வழங்கப்பட்டவை		1,068	996	1,107	1,117	1,171
குடும்ப வன்முறை வகைகள்	தெரிந்தே காயம் விளைவித்தல்	1,596	1,554	1,778	1,345	1832
	அச்சுறுத்தல்	1,214	1,181	1,116	870	1,242
	தொடர்ந்து தொல்லை கொடுத்தல்	697	688	806	685	1,029
	முறையின்றி சிறைப்படுத்தல்	84	49	55	62	112

தகவல்: கீழ் நீதிமன்றம்

குடும்ப வன்முறை வழக்குகளை விசாரித்து அறிவதற்கு ஏற்றவகையில் தனிநபர் பாதுகாப்பு ஆணை (பிபிஓ) வேண்டி வரும் விண்ணப்பங்களைக் குடும்ப நீதிமன்றம் அனுக்கமாகக் கண்காணித்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாக வரும் 'பிபிஓ' விண்ணப்பங்களின் எண்ணிக்கை விவரங்கள் இடப்பக்கத்தில்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டால்...

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை அறிந்திருந்தாலும் கீழுள்ள உடனடி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும்.

▸கோம்கேர்: 1800 222 0000

குடும்ப வன்முறை நிபுணத்துவ நிலையங்கள்:

- ▸ பேவ்: 6555 0390
- ▸ 'டிராண்ஸ்' பாதுகாப்பு நிலையம்: 6449 9088
- ▸ கேர் கார்னர் புரோஜெக்ட் ஸ்டார்ட்: 6476 1481

▸ குடும்ப வன்கொடுமைகளை பொறுத்தவரை பதற்ற நிலையை உருவாக்கும் கட்டம், வன்முறை அத்தியாயம், (கடுஞ் சொல்லைக் கடந்து அடி உதை என்ற உடல் ரீதியான தாக்குதல் காலம்), பிறகு மன்னிப்பு கேட்டல், கெஞ்சுதல், இழைத்த கொடுமைகளை மறைக்க வெளிமிடங்களுக்கு அழைத்து செல்லுதல் என்று மூன்று கட்டமாக விரிகிறது.

▸ பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உடல், மனம், பாலியல், பொருளியல் என பல வடிவங்களில் வரலாம். இத்தகைய கொடுமைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை மட்டுமல்ல ஒரு பெண் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை அவளை பின் தொடரும் தொற்றுநோய். வன்முறையானது பெண்களுக்கு உடல்ரீதியான பிரச்சினைகளை தருவது மட்டுமன்றி இதற்குடன் பொது வாழ்க்கையில் ஈடுபடுவதைக் கூட முழுங்கடித்து விடும்.

▸ பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அந்தப் பெண்ணை மட்டும் அல்ல அவள் சார்ந்த குடும்பம், சமூகம் தேசத்தை கூட நலிவடையச் செய்திடும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

▸ அனைத்துலக ஆய்வறிக்கைகள் படி 70% பெண்கள் தங்கள் வாழ்நாளில் வன்முறையை அனுபவிக்கின்றனர். உலகளாவில் பார்க்கும்போது தங்கள் நெருங்கிய துணையால் அவர்களுக்கு இழைக்கப்படும் உடல்ரீதியான கொடுமையே பெண்களுக்கு எதிரான வன்முறையில் முதலிடம் வகிக்கிறது.

▸ பெண்கள் கொல்லப்பட்ட சம்பவங்களில் ஆஸ்திரேலியா, கனடா, இஸ்ரேல் நாடுகளில் 40%-70% சம்பவங்கள்அவர்கள் தங்கள் ஆண் துணைகளால் கொல்லப்பட்டதால் நிகழ்ந்தவை.

தகவல்: ஐக்கிய நாடுகள் சபை ஆய்வறிக்கைகள்